ஆகாய்

Sword of the Spirit

ஆசிரியர் குறிப்பு

Sword of the Spirit

- **ஆசிரியர்** :: ஆகாய்
- **பெயரின் பொருள்** :: பண்டிகை
- **காலம்** :: கி.மு 520 (பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பியப் பின் 18 வருடங்கள் கழித்து ஆகாய் தீர்க்கதரிசனம் உரைத்தார்).
- பாபிலோனிலிருந்து இஸ்ரவேலர்கள் திரும்பியபின் தீர்க்கதரிசனம் உரைத்த 3 தீர்க்கதரிசிகளில் ஒருவர் ஆகாய். (சகரியா, மல்கியா)
- யூதாவின் ஆளுநராகிய செருபாபேலுடனும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவுடனும் பேச கர்த்தர் ஆகாயை அழைத்தார்.
- ஆன்மீக காரியங்களை சிந்தித்துப் பார்ப்பதற்கும், தலைவர்கள் ஜனங்களைத் திரட்டுவதற்கும், உண்மையான பணியை ஏற்றுக்கொள்வதற்கும், ஆலயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் ஆகாய் ஒரு உந்துசக்தியாக அழைக்கப்பட்டார்.

Sword of the Spirit

புத்தகக் குறிப்பு

Sword of the Spirit

- சிறு தீர்க்கதரிசனப் புத்தகங்களில் **10 ஆம் புத்தகம்**.
- ஆகாய் புத்தகம் **பழைய ஏற்பாட்டின் இரண்டாவது சிறிய புத்தகம்**.
- எஸ்றா, எரேமியா, சகரியா, மல்கியா, ஆகிய புத்தகங்களைப் பற்றிய அறிவு இருந்தால் மாத்திரமே இப்புத்தகத்தின் முழு முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும்.
- **புத்தகத்தின் நோக்கம் ::**
  - சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்கள் கர்த்தருக்கும், குறிப்பாக கர்த்தருக்குக் கீழ்ப்படியவும் முதலிடம் கொடுக்கவில்லை. எனவே கர்த்தருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.
  - ஆலய மறுசீரமைப்பின் பணியில் ஜனங்கள் ஈடுபடுவதன் மூலம், தேவன் தனது ஜனங்களுடன் ஒரு உடன்படிக்கை உறவைப் புதுப்பிக்க விரும்புவதை எடுத்துக்காட்டுகிறது.
- ஆகாய் புத்தகத்தில் தீர்க்கதரிசனங்களின் தேதிகள் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Sword of the Spirit

- **புத்தகத்தின் பிரிவுகள் ::**

	ஆண்டு	மாதம்	நாள்
I. கீழ்ப்படியாமைக்கு கண்டனம் (1:1-11)	2	6	1
II. ஜனங்களின் பதில் மற்றும் மறுகட்டமைப்பு (1:12-15)	2	6	24
III. தேவ மகிமை (2:1-9)	2	7	21
IV. கேள்விகள் (2:10-19)	2	9	24
V. கர்த்தருடைய ஆட்சி (2: 20-23)	2	9	24

Sword of the Spirit
Sword of the Spirit

வரலாற்றுப் பின்னணி

Sword of the Spirit

❖ வரலாற்றுப் பின்னணி::

- ➢ இஸ்ரவேலர்கள் பாபிலோனிய ராஜா நேபுகாத்நேச்சாரால் பாபிலோனுக்கு சிறைப்படுத்தப்பட்டார்கள். ஆனாலும் வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்திற்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள்.
- ➢ கர்த்தர் குறித்த காலத்திற்குப் பின் (70 வருடங்கள்) பெர்சியா பாபிலோனை வீழ்த்தியது.
- ➢ பெர்சிய ராஜாவாகிய கோரேஸை கர்த்தர் தெரிந்துகொண்டு, தம் ஜனத்தை மீண்டும் சொந்த தேசத்திற்கு அனுப்பும்படிச் செய்தார்.
- ➢ தேசத்திற்குத் திரும்பியவர்கள் தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஆரம்பித்த வேளையில் மிகுந்த எதிர்ப்பினிமித்தம் சோர்ந்து போனதால் தேவாலயக் கட்டுமானப் பணி நின்று போனது.
- ➢ உணவு, உடை மற்றும் தங்குமிடம் இல்லாததைக் காரணாகக் கூறியதைக் குற்றம் சாட்டினார் ஆகாய்.
- ➢ கர்த்தர் ஜனங்களை எழுப்பியதினிமித்தம் கர்த்தருடைய வீட்டைக் கட்டியெழுப்புவதற்கான செய்தியை ஏற்றுக்கொண்டனர்.

Sword of the Spirit

❑ பாபிலோனிருந்து திரும்பிய கர்த்தருடைய ஜனம்

A. முதல் கட்டம் : கி.மு. 538 இல் செருபாபேலின் தலைமையில் **கோரேஸின் (539-530)** (எஸ்றா 1--6) ஆட்சிகாலத்தில் திரும்பினார்கள்.

- ❖ ஆலயம் திரும்பக் கட்டப்பட்டது : ஆகாய் மற்றும் சகரியா தீர்க்கதரிசனம் மற்றும் **தரியு I (கி.மு. 521-486)** இன் கீழ் கட்டி முடிக்கப்பட்டது.
  - ➢ பலிபீடம் கட்டப்பட்டு, சர்வாங்க தகன பலிகள் செலுத்தப்பட்டது. (எஸ்றா 3: 1-6)
  - ➢ **(கி.மு.536)** திரும்பி வந்த இரண்டாம் ஆண்டில் ஆலயத்திற்கு அஸ்திபாரம் அமைக்கப்பட்டது (எஸ்றா 3: 8-13; 5:16)
  - ➢ சத்துருக்களின் எதிர்ப்பு ஜனங்களின் கைகளைத் தளரப் பண்ணி ஆலயம் கட்டப்படாதபடிக்கு 16 ஆண்டுகள் கழிந்தது. **(கி.மு.520 வரை)** (எஸ்றா 4: 4-5)
  - ➢ ஆகாய் மற்றும் சகரியா **(கி.மு.520-518)** ஆலயத்தைக் கட்டியெழுப்பும்படி கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு தேசத்தை ஊக்குவித்தார்கள்.

Sword of the Spirit

தேவாலயம் கட்டப்படும்போது ஆட்சியிலிருந்த பெர்சிய ராஜாக்கள்



3 கட்டமாக யூதா பாபிலோனியர்களால் முற்றுகை

பெர்சிய மன்னன் கோரேஸ் பாபிலோனை வென்றான்

யூதர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்ப கோரேஸ் உத்தரவு

ஜனங்கள் யூதாவிற்குத் திரும்பிய பின் வந்த முதல் வருடம்.

புதிய தேவாலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்டது **கி.மு 536**

தரியுவின் ஆட்சிக் காலம்

தேவாலயத்தைக் கட்டும்படியாக ஆகாய் மூலமாக கர்த்தர் உரைத்தல்

தேவாலயம் கட்டி முடிந்தது

Sword of the Spirit

கீழ்ப்படியாமைக்கு கண்டனம்

(1:1-11)

Sword of the Spirit

❑ உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்

கர்த்தருடைய வார்த்தை யூதாவின் தலைவனாகிய செருபாபேலுக்கும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவுக்கும்.

4. இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?

9. அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது; .....; எதினிமித்தமென்றால், என் வீடு பாழாய்க்கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதினிமித்தமே .

11. நான் நிலத்தின்மேலும், மலைகளின்மேலும், ..., பூமியில் விளைகிற எல்லாவற்றின்மேலும், மனுஷரின்மேலும், மிருகங்களின்மேலும், கைப்பாடு அனைத்தின்மேலும் வறட்சியை வருவித்தேன் என்றார்.

Sword of the Spirit

ஜனங்களின் பதில் மற்றும் மறுகட்டமைப்பு (1:12-15)

Sword of the Spirit

❑ நான் உங்களோடே இருக்கிறேன்

- ❖ தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்கும், தேவனாகிய கர்த்தர் அனுப்பின தீர்க்கதரியினுடைய வார்த்தைகளுக்கும் செவி கொடுத்தார்கள்.(12)
- ❖ கர்த்தருக்கு முன்பாக பயந்திருந்தார்கள்.(12)
- ❖ கர்த்தர் எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்.(14)
- ❖ ஜனங்கள் வந்து , தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலை செய்தார்கள். (14)

Sword of the Spirit

தேவ மகிமை
(2:1-9)

Sword of the Spirit

❑ திடன் கொள்ளுங்கள்

- ❖ 3. இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்டவர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார்? இப்பொழுது இது உங்களுக்கு எப்படிக் காண்கிறது? அதற்கு இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாததுபோல் காண்கிறதல்லவா?
  - ➢ திடன் கொள்ளுங்கள் (4)
  - ➢ வேலையை நடத்துங்கள் (4)
    - ▪ நான் உங்களுடனே இருக்கிறேன்
  - ➢ பயப்படாதிருங்கள் (5)
    - ▪ என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைக்கொண்டிருப்பார்.

- ❖ 6.இன்னும் ஒரு தரம் ...7. சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் .

- ❖ 9. முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன்

Sword of the Spirit

கேள்விகள்
(2:10-19)

Sword of the Spirit

❑ நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப் பாருங்கள்

ஆசாரியர்களிடத்தில்

11. ஒருவன் தன் வஸ்திரத்தின் தொங்கலிலே பரிசுத்த மாம்சத்தைக் கொண்டுபோகையில் தன் வஸ்திரத்தின் தொங்கல் ...மற்றெந்த போஜனபதார்த்தத்தையாகிலும் தொட்டால் அது பரிசுத்தமாகுமோ??

- ❖ பரிசுத்தமாகாது

13. பிணத்தால் தீட்டுப்பட்டவன் அவைகளில் எதையாகிலும் தொட்டால், அது தீட்டுப்படுமோ??

- ❖ தீட்டுப்படும்

14. அப்படியே இந்த ஜனங்களும் இந்த ஜாதியாரும் என் சமுகத்தில் இருக்கிறார்கள்

17. கருக்காயினாலும் விஷப்பனியினாலும் கல்மழையினாலும் உங்களை உங்கள் கைகளின் வேலையிலெல்லாம் அடித்தேன்; ஆனாலும் நீங்கள் என்னிடத்தில் மனதைத் திருப்பாமற்போனீர்கள் .

சிந்தித்துப் பாருங்கள்......19. நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்.

Sword of the Spirit

கர்த்தருடைய ஆட்சி
(2: 20-23)

Sword of the Spirit

❑ நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்

யூதாவின் தலைவனாகிய செருபாபேலிடம்

- 22. ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து,
- ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழித்து,
- இரதத்தையும் அதில் ஏறியிருக்கிறவர்களையும் கவிழ்த்துப்போடுவேன்;
- குதிரைகளோடே அவைகளின்மேல் ஏறியிருப்பவர்களும் அவரவர் தங்கள் தங்கள் சகோதரனின் பட்டயத்தினாலே விழுவார்கள்.
- 23. சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே,
- உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்;
- நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் .

Sword of the Spirit

தேவனுக்கே மகிமை

Sword of the Spirit